# அகநானூறு காட்டும் எயினர் வாழ்வியலும் நிலவியல் பண்பாடும்

***சி. நவீன் பிரசாத்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
டாக்டர். என். ஜி. பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383319

## முன்னுரை

*இனக்குழுக்கள் முதலில் நாடோடிச் சமூகமாக இருந்து பின் கால்நடைச் சமூகமாக வளர்ந்து வேளாண்மைச் சமூகமாக உருமாற்றம் பெற்றது. வரலாற்று ஆசிரியர்கள் குறிஞ்சியில் இருந்தும் முல்லையில் இருந்தும் தமிழினக் குழுக்களின் தொடக்கத்தினைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டனர். அவற்றுள் பாலை என்ற நிலப்பரப்பில் உள்ள குடிகளைப் பற்றியும் ஆராய்ந்து பெற்ற முடிவுகள் புதிய நோக்கினைக் கொண்டைவையாக அமைகின்றன. பாலை நிலத்தின் பூர்வகுடிகளாக சங்க இலக்கியத்தாலும் பிற்கால இலக்கிய, இலக்கண ஆசிரியர்களாலும் இனங் காட்டப்படுவோரான எயினர், எயிற்றியர் என அழைக்கப்படும் மக்களின் வாழ்வியலும் நிலவியல் பண்பாடும் பிற திணை குடிகளை காட்டிலும் தொன்மையாக விளங்குவதை நம்மால் அறிய முடிகிறது. சங்க இலக்கியங்களில் ஒன்றான அகநானூறு காட்டும் எயினர் குடிகளின் வாழ்வியலை, நிலவியல் பண்பாடு குறித்த பதிவுகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.*

## தொல்காப்பியரும் பாலைக் குடிகளும்

*குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் திணைகளை நிலம்பெறும் திணைகளாகக் குறிக்கும் தொல்காப்பியர் பாலைத் திணையை நானிலத்துக்கும் பொதுவானதாக குறிப்பிடுகின்றார். திணை கோட்பாட்டினை முதற், கரு, உரி என்ற பொருள்களின் மூலம் தொல்காப்பியர் விளக்குகிறார். ஒரு நிலத்தின் கருப்பொருட்களில் முதலாவதாக விளங்குவது தெய்வம், பாலை நில தெய்வம் பற்றிய தெளிவான விளக்கத்தை தொல்காப்பியர் தரவில்லை, ஏனென்றால் தொல்காப்பியர் அதனைத் தனி நிலமாக அல்லாது ஒரு ஒழுக்கமாக மட்டுமே விளக்கிச் செல்கிறார். அடுத்ததாக மக்களைப் பற்றிப் பேசுகையில், முல்லைத்திணை மக்களினுடைய மக்கட்பெயரை மட்டும் சுட்டிச் சென்ற தொல்காப்பியர் பிற திணை மக்களின் பெயர்கள் தொழிலாலும், குலத்தாலும் அமைவன என்கிறார். இதனை,*

> ***"ஏனோர் மருங்கினும் எண்ணும் காலை / ஆனா வகைய திணைநிலைப் பெயரே."***
>
> ***(தொல், அகத், 24)***

*என்ற நூற்பாவின் மூலம் அறியலாம்.*

*இதில் தம் செயலால் (தொழில்) நானிலத்து மக்களும் அறிந்து அஞ்சி நடுங்கும்படியான வாழ்வினை வாழ்ந்தவர்கள் எயினார்கள். காலத்தால் முற்பட்ட தொல்காப்பியத்தில் நேரடியாக இடம்பெறாத எயினக் குடிகள் பற்றி சங்க இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றது.*

## சங்க இலக்கியங்களில் எயினர்

*வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுப்படி இனக்குழுக்கள் நாடோடிச் சமூகமாக குறிஞ்சி நிலம் விட்டு முல்லை நிலம் சென்று சேர்கிறது. இதில் மலைப் பகுதிகளின் எல்லைகளிலேயே சிலர் தங்கிட்ட விட்ட நிலையில் அவர்கள் பாலை நிலத்தில் வாழும் நிலைகுடிகளாகின்றனர். பாலைக் குடிகள் கூட்டமாக வாழும் பழக்கம் உடையவர்கள். கடும் வறட்சியுற்ற நிலப்பகுதிகளில் இக்குடிகள் தம் வாழ்வினை மேற்கொண்டுள்ளனர். அதனால் தொல் இனக்குழுக்களின் பழக்க வழக்கமான*

வேட்டையாடுதலை இவர்கள் கைவிடாது தம் தொழிலாக மேற்கொள்கின்றனர். இவர்கள் வேட்டையாடுவதற்கு வில்லை ஆயுதமாகப் பயன்படுத்தினர்.

ஒரே காலத்தில் தன்னோடு வாழ்ந்த பிற குடிகளில் இருந்து இவர்கள் தொன்மை வாய்ந்தவர்களாக கருதுவதற்குக் காரணம்; ஆதி மனிதன் இயற்கையிடமிருந்து உணவினைத் தேடி எடுத்துக் கொள்பவனாக இருந்தான். சங்க கால எயினர்களும் தம் உணவினை இயற்கையிடமிருந்து சேகரித்து அதனை பிற்கால தேவைக்கு ஏற்ப சேமித்து வைத்துக் கொள்ளும் பழக்கத்தையும் பெற்றிருந்தனர். குறிஞ்சி நிலத்தில் உள்ள குறவர் இனக்குடிகளும் இயற்கையோடு இயைந்த வாழ்வினை வாழ்ந்தவர்கள் அவர்களின் உணவுத்தேடலில் மிக முக்கியமான தேன் எடுத்தல் என்னும் தொழிலுக்கு இணையான தொழிலாக இங்கு புல்லரிசி சேமித்தல் உள்ளது இவ்விரண்டுமே இயற்கை இடம் இருந்து உணவினை பெற்றுக்கொள்ளும் முறை ஆனால் குறிஞ்சி நில மக்கள் திணைப்புலம் காக்க வேட்டையாடுவர் இது தற்காத்தல் ஆகும். இதில் விலங்கினங்களை திணைப் புலம் விட்டு அகற்றுவதே பிரதான நோக்கமாக இருக்கிறது. பாலை நில எயினர்கள் உணவுத் தேவைக்காக வேட்டையாடுகின்ற இயல்பு உடையவர்களாக இருக்கின்றனர். இது ஆதி மனிதனின் உணவு சார்ந்த செயல்பாடுகளாக அமைந்துள்ளது.

## இலக்கியங்களில் எயினர்கள்

எயினர் என்ற சொல் பாலை நில பொது மக்களின் பொதுவான பெயரைக் குறிக்கும். இவர்கள் வேட்டையாடும் தொழிலை முதன்மையாகச் செய்தவர்கள் ஆவர். வேட்டுவக் குடியைச் சேர்ந்தவர்களைக் குறிப்பதாகவும் சங்க இலக்கியக் குறிப்புகள் உள்ளன. அவ்வாறான சமூகத்தவரில் எயினர்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. சான்றாக, கொடு வில் எயினர் குறும்பிற்கு ஊக்கும் என்ற பாடல் வரிகளைக் கூறலாம். ( அகம் 319), வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்/அளி இயல் வாழ்க்கை பாழி பறந்தலை (அகம் 208), வண் கை எயினன் வாகை அன்ன ( புறம் 351), கொடு வில் எயினர் கொள்ளை உண்ட (பட்டினப் பாலை 266), கொடு வில் எயின குறும்பில் சேப்பின் (பெரும், 129) ஆகிய சங்க இலக்கியப் பாடல் வரிகளின் மூலம் எயினர்கள் வாழிடம், தொழில், வாழ்வியல் ஆகியவற்றை அறிந்து கொள்ள முடிகிறது.

## ஆறலைத்தல்

பாலை நிலத்தில் ஆறலைத்தல் என்பது ஒரு வாழ்க்கை முறையாகவே பார்க்கப்படுகிறது. பாலை நிலங்கள் கடும் வறட்சிக்கு உண்டான பகுதி அந்நிலை இன்னும் தீவிர நிலை அடையும்போது அந்நில மக்கள் அவ்வழியில் வரும் மக்களைத் தாக்கி அவரது உடைமைகளைக் கொள்ளும் வழக்கத்தை மேற்கொண்டிருக்கலாம்.

உளவியலாளர்களின் கூற்றின்படி வாழ்வாதார அடிப்படைத் தேவைகளில் மனிதனுக்குச் சிக்கல் ஏற்படும் போது அவன் குற்றம் புரிபவனாகிறான் என்கின்றனர்.

சங்க இலக்கியங்களில் ஆறலைத்தலைப் பற்றிக் குறிப்பிடும் புலவர்கள் அது தலைவிக்கு மிகுந்த துயரத்தை தரும் என்ற நிலையிலேயே குறிப்பிடுகின்றனர்.

**“நெறிசெல் வம்பலர்க் கொன்ற தெவ்வ / ரெறிபடை கழீஇய சேகரின் சின்ன”**

**(அகம் - 113)**

இப்பாடலானது பாலை நிலத்தின் வழியே பொருளீட்டச் சென்று திரும்பும் தலைவனைப் பற்றி தலைவி எண்ணிப் புலம்புவதாக அமைவது, வழியில் செல்லும் புதியவர்களைக் கொன்ற பகைவர்களாகிய ஆறலைக் கள்வர்கள் தாம் எறிந்த படைக்கலன்களை கழுவியதால் பாலை நிலத்தில் உள்ள ஊற்று நீர் சிவந்தது என தலைவி புலம்புகிறாள். இப்படி பாலை நில மக்களைக் கண்டு பிற திணை மக்கள் அஞ்சும் படியான வாழ்க்கையே சங்க இலக்கியம் நமக்கு காட்டுகிறது. இதனாலேயே

*இவர்களை கொடியோர், வன்சொல் இளைஞர் என பழித்துக் கூறுகின்றது. இதன் வழியாக இவர்களின் நிலவியல் பண்பாட்டையும் அவர்களின் வாழ்க்கை முறையைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது.*

**எயினரின் ஆற்றல்**

*எயினர்களின் வில்லாற்றல் சங்க இலக்கியங்களில் உயரிய வகையில் போற்றப்பட்டுள்ளது. இத்தகு வீரத்தினை உடைய குடிகளை அரசு தன் எல்லைகளை விரிவாக்குவதற்காகவும் காவலுக்காகவும் பயன்படுத்திக் கொள்ளுவது வழக்கமான நடைமுறையே ஆகும். அரசு உருவாக்கத்தில் முதல் போரான ஆநிரை கவர்தலை இவர்கள் பல காலமாக தாம் வாழ்ந்த நிலப்பரப்பில் உள்ள அரசனுக்குச் செய்துள்ளனர். அதனொடு எல்லைகளை வேவு பார்க்கும் தொழிலையும் மேற்கொண்டுள்ளனர்.*

***"வில்வ லாடவர் மேலா ளொற்றி" (அகம்- 263)***

*என்னும் அகப்பாடலில் புதிதாக தம் நிலத்தில் வருபவர்களின் இயல்பினை அறியும் பொருட்டு வில் இடுதலில் வலிமையுடையவர்களாகிய எயினர்கள் உயர்ந்த யா மரத்தின் மீது அமர்ந்து ஒற்று பார்த்த செய்தியுள்ளது.*

***"வண்கை யெயினன் வாகை யன்ன"***

***(புறம்- 351)***

*என்ற புறநானூற்று பாடல் எயினர்களைப் போல வள்ளல் தன்மை உடையவர்களாக மூவேந்தர்கள் விளங்குகின்றனர். அவர்கள் இரக்கம் காட்டாது தம் ஆற்றலை வெளிப்படுத்தி தீமை விளைவிப்பர் என குறிப்பாக சுட்டுகிறார். கடும் போர் புரிதல் போன்ற பேராற்றல்கள் எயினர்களிடம் உள்ளமையால் வேந்தர்களை என்றுமே அச்சத்தில் ஆழ்த்துபவர்களாக விளங்குகின்றனர்.*

**சங்கம் மருவிய காலத்தில் எயினர்**

*பிற திணை குடிகளுக்கு அச்சம் தரும் வகையில் வாழ்ந்த எயினர்கள் சிலப்பதிகாரத்திலும் ஆற்றுப்படை நூல்களிலும் அத்தகு அச்சம் தரும் வாழ்விலிருந்து சற்று ஒதுங்கி அறக்குடிகளாக தங்களை மாற்றிக் கொண்டுள்ளது தெரிகிறது.*

***"எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு"***

***(சிறு.பாண் - 175-177)***

*நல்லியக் கோடனை காணச் செல்வோருக்கு பாலை நில எயிற்றியர் இனிய புளியினால் சமைத்த சோற்றோடு, காட்டுப் பசுவின் இறைச்சியும் தந்து கவனித்த செய்தியினை சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகிறது. இத்தகைய விருந்தோம்பல் சிறப்பினை பெரும்பாணாற்றுப்படை இன்னும் விரிவாகப் பேசுகிறது.*

**காப்பியங்களில் எயினர்**

*சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் எயினர்கள் தம் கடுமையான கொலை தொழிலை விடுத்தும் அறக்குடிகளாக வாழ்ந்த குறிப்புகள் மூலம் கி.பி இரண்டாம் நூற்றாண்டு காலகட்டங்களில் உருவான வேந்தர் ஆட்சி முறையில் அவர்கள் தம் இயல்பில் இருந்து மாறுபட்டது தெரிய வருகிறது.*

*சீவக சிந்தாமணியில் எயினர் பற்றிய குறிப்புகள் கோவிந்தையார் இளம்பகத்தில் இடம்பெறுகின்றது. வில்லேந்திய எயினர் கூட்டம் கூடி வந்து தம் ஆநிரைகளை வளைத்து, அருவி விழும் உச்சியில் உள்ள தன் நாட்டை நோக்கி காட்டு வழியில் சென்றனர் என்ற செய்தியினை இடையர்கள் ஊர் முழுவதும் அறிவித்ததாக பாடல் உள்ளது.*

***"கொடுமர வெயின ரீண்டிக் கோட்டிமி லேறு சூழ்ந்த***
***படுமணி நிரையை வாரிப் பைந்துகி லருவி நெற்றி***
***நெடுமலை யத்தஞ் சென்றா ரென்றுநெய் பொதிந்த பித்தை***
***வடிமல ராயர் பூசல் வளநகர் பரப்பி னாரே."***

***(சீவக.சிந் , 2 , 20)***

*சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்திலும் வறண்ட நிலங்களில் வாழும் குடிகளாக விளங்கிய எயினர்கள் சீவக சிந்தாமணியில் 'அருவி விளக்கக்கூடிய மலை உச்சிக்கு சென்றனர்' என்ற குறிப்பு உள்ளன அத்தோடு ஆற்றுப்படைகளிலும் சிலம்பிலும் அறக்குடிகளாக விளங்கிய எயினர்கள் இங்கு மீண்டும் தன் பூர்வகுடித் தொழிலான ஆகோல் போர் மேற்கொண்டுள்ளனர்.*

*கம்பராமாயணத்தில் குகனை எயினன் என்று கம்பர் குறிப்பிடுகின்றார்.*

**"துடியன், நாயினன், தோற் செருப்பு ஆர்த்த பேர்"**

***(கம்ப, குகப்படலம் - 2)***

*குகனை குகப்படலத்தில் அறிமுகப்படுப்போது பாலைக்கு உரிய துடி என்னும் பறை உடையவன், வேட்டை நாய்களை உடையவன் என்று பாலைத்திணைக்குரிய கருப்பொருள்களைப் பயன்படுத்தியிருப்பார். மேலும்*

**"வழுவிலா எயினர் வேந்தன் குகன்எனும் வள்ளல் என்பான்"**

***(கம்ப, மீட்சிப் படலம் - 316)***

*இங்கு எயினன் என்பதற்கு வேடன் என உரையாரியர்கள் பொருள் கொள்கின்றனர். கம்பரும் குகனை வேடங்களின் தலைவனாகவே காட்சிப் படுத்துகிறார். கம்பர் குறிப்பிடும் செய்திகள் சங்க இலக்கியங்களில் சொல்லப்பட்ட எயினக் குடிகளுப் புறம்பானவை. ஒரு வேளை ஆதியில் அவர்கள் சிறப்பான வாழ்வு வாழ்ந்ததாக கம்பர் கற்பனையில் புனைந்திருக்கலாம். கி.பி ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பிறகு எழுந்த இலக்கியங்களில் உள்ள குறிப்பின்படி எயினன் என்ற சொல் வளமான காட்டுப்பகுதிகளில் வாழ்ந்து வேட்டைத் தொழில் புரியும் ஒரு வேடர் குழுக்களைக் குறிக்கப் பயன்பட்டுள்ளது. இதன்படி பார்த்தால் கம்பராமாயணம் காட்டும் எயினர் வாழ்வியலை ஏற்க முடியவில்லை, ஆனால் சீவக சிந்தாமணி காட்டப்படும் எயினர்களின் வாழ்வியல் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக உள்ளது. எயினர்கள் பின்னாளில் வளமான காட்டுப் பகுதிகளுக்கு குடியேறி ஆறலைத்தலை விடுத்து வேட்டைத் தொழிலை மட்டும் செய்து வந்திருக்கலாம் என்ற கருத்திற்கு வர முடிகிறது. இது அவர்களின் நிலவியல் சார்ந்த தொழிலையும் நிலவியல் பண்பாட்டுப் பதிவுகளையும் விளக்குகிறது.*

## முடிவுரை

*சங்க இலக்கியங்கள் காட்டும் குடிகளில் தனக்கென தனி அடையாளத்தோடு எயினர்கள் வாழ்ந்துள்ளனர். வேளாண்மைச் சமுகத்திற்கு தன்னை உட்படுத்திக் கொள்ளாமல் வேட்டைச் சமுகத்தின் எச்சங்களாகவே பயணித்துள்ளனர். தமது வில்லின் வலிமையால் முதலில் விலங்குகளை வேட்டையாடி ஆகோள் போரில் சிறந்து விளங்கிய இவர்கள், கால மாற்றத்தால் ஆறலைக் கள்வர்களாக மாறி தம் வறுமை நிலையை போக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர். பிற குடிகளிடமிருந்து தன் தொழிலினால் தனிமைப்படுத்தியதோடு தம்மை வேறுபடுத்திக் கொண்டும் தனிமைப்படுத்திக் கொண்டும் தமக்குரிய ஆதியெச்சங்களோடு வாழ்ந்து வந்துள்ளனர். பெருங்கற்கால மனிதர்களாக வாழ்ந்து வழிபாட்டாலும் சடங்குகளாலும் நம்பிக்கையாலும் தம்மை பிற இனக்குழு மக்களிடம் இருந்து வேறுபடுத்திக் கொள்கின்றனர். எல்லாக் குடிகளும் வளர்ச்சி நிலை அடைந்த பிறகும் எயினர்கள் தம் வாழ்வியலில், நிலவியல் பண்பாட்டில் பெரியளவில் மாறுபடாமல் வாழ்ந்துள்ளனர் என்பதை மேற்கண்ட கட்டுரை மூலம் உணர முடிகிறது.*

## துணை நின்ற நூல்கள்


1. *அறவேந்தன். இரா, (2024), குறுந்தொகை உரை வேறுபாடு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.*
2. *இளம்பூரணர் உரை (2005), தொல்காப்பியம் - பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை.*
3. *செல்வராசு. அ, (2024), புறநானூறு உரை வேறுபாடு தொகுதி- 1, 2 , நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.*
4. *செல்வராசு. அ, (2024), சிறுபாணாற்றுப்படை உரை வேறுபாடு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.*
5. *துரைசாமிப்பிள்ளை. ஔவை. சு (1941), சீவக சிந்தாமணி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி.*
6. *பரமசிவன். மா, (2024), அகநானூறு உரை வேறுபாடு தொகுதி-1, 2, 3 , நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.*
7. *வேங்கடசாமி நாட்டார் நா. மு , (2012), சிலப்பதிகாரம் - மதுரைக்காண்டம், தமிழ்மண் பதிப்பகம், சென்னை.*